ஆடித் திருவிழாவையொட்டி இறைச்சி விற்பனை அமோகம்

ஐந்து மடங்கு விற்பனை அதிகரித்ததால் வியாபாரிகள் மகிழ்ச்சி

■ சேலம்

சேலத்தில் ஆடிப்பண்டிகையை யொட்டி நேற்று ஆடு, கோழி, மீன் உள்ளிட்ட இறைச்சி விற்பனை அமோகமாக நடந்தது. வழக்கமாக விற்பனையாவதைக் காட்டிலும் நேற்று இறைச்சி விற்பனை ஐந்து மடங்கு அதிகரித்ததால், வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

சேலம் மாநகரத்தில் பிரசித்தி பெற்ற கோட்டை மாரியம்மன் கோயிலில் கடந்த ஜூலை 5-ம் தேதி முகூர்த்தக்கால் நடும் விழாவுடன் ஆடிப்பண்டிகை தொடங்கியது. அதேபோல, அம்மாப்பேட்டை பலப்பட்டரை மாரியம்மன், சஞ்சீவிராயன்பேட்டை மாரியம்மன், குகை மாரியம்மன், செவ்வாய்ப்பேட்டை மாரியம்மன் உள்ளிட்ட எட்டுப்பட்டிகளில் உள்ள மாரியம்மன் கோயில்களில் ஆடிப்பண்டிகை வெகு விமரிசையாக மக்கள் கொண்டாடி வருகின்றனர்.

நேற்று ஆடிப்பண்டிகையின் முக்கிய நிகழ்வான பொங்கல் விழா நடந்தது. இதையொட்டி அம்மனுக்கு பக்தர்கள் மாவிளக்கு நெய் தீபம் கொண்டு வந்து, கோயிலில் பொங்கல் வைத்து வழிபாடு நடத்தினர். மேலும், ஒவ்வொரு வீட்டிலும் கோழியை பலியிட்டு, கறி சமைத்து உறவினர்கள், நண்பர்களுக்கு விருந்து படைத்தனர்.

ஆடிப்பண்டிகை பொங்கல் விழாவுக்காக மாவட்ட நிர்வாகம் நேற்று உள்ளூர் விடுமுறை வழங்கியது. ஆடிப்பண்டிகைக்காக வந்துள்ள உறவினர்களுக்கு பொதுமக்கள் ஆடு, கோழி, மீன் உள்ளிட்ட இறைச்சிகளை கடைகளில் அதிகளவு வாங்கிச் சென்றனர். ஆடு கிலோ ரூ.800 எனவும், நாட்டுக் கோழி கிலோ ரூ.550 எனவும், வளர்ப்பு நாட்டு கோழி கிலோ ரூ.350 எனவும், பிராய்லர் கோழி கிலோ ரூ.220 எனவும் விற்பனையானது. அதேபோல, மீன் கடைகளில் மத்தி, கெளுத்தி, பாறை, ஜிலேபி, கிழங்கான் உள்ளிட்ட பல்வேறு வகையான மீன்கள் கிலோ ரூ.180 முதல் ரூ.550 வரை விற்பனையானது. வழக்கமாக விற்பனையாவதைவிட நேற்று பண்டிகை தினத்தில் இறைச்சிக் கடைகளில் ஐந்து மடங்கு விற்பனை அதிகரித்துள்ளதால், வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

நாமக்கல் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையத்தில் 2026–27–ம் கல்வி ஆண்டுக்கான வகுப்பு தொடக்க விழா நடைபெற்றது. விழாவில், மாணவிகளுக்கு பயிற்சி கையேடுகளை கூட்டுறவுத்துறை துணைப் பதிவாளர் ஜேசுதாஸ் மற்றும் பயிற்சி நிலைய முதல்வர் செல்வி ஆகியோர் வழங்கினர்.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அமுலாக்கலில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திருப்பி அனுப்ப இயலாது.

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
கிளை அலுவலகம்: எண்.30/3-2, மெயின் ரோடு, முல்லை நகர், சூரமங்களம், சேலம், தமிழ்நாடு - 636005

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண். 8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	03.08.2026 அன்றுள்ளபடி கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை (EMD)
1172210080000071 1.Mr.S.கௌரிராஜன் 2.Mrs.G.லதா 3.Mr.S.சதீஷ் குமார் 4.Mr.S.முருகன்	(i) 16.02.2022 15.02.2022 அன்றுள்ளபடி ₹ 10,57,794/- (ரூபாய் பத்து லட்சத்து ஐம்பத்து ஏழாயிரத்து எழுநூற்று தொண்ணூற்று நான்கு மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 20.07.2022 & நேரடி சுவாதீனம் - 21.03.2024	₹ 13,60,332.31 (ரூபாய் பதிமூன்று லட்சத்து அறுபதாயிரத்து முன்னூற்று முப்பத்து இரண்டு மற்றும் பைசா முப்பத்து ஒன்று மட்டும்)	₹ 15,66,000/- (ரூபாய் பதினைந்து லட்சத்து அறுபத்து ஆறாயிரம் மட்டும்)	₹ 1,56,600/- (ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பத்து ஆறாயிரத்து அறுநூறு மட்டும்)

சொத்து விவரம்: சேலம் மேற்கு பதிவு மாவட்டம், மகுடஞ்சாவடி சார்பதிவு அலுவலக எல்லைக்குட்பட்ட பழைய சர்வே எண்.262/5, புதிய சர்வே எண்.868/4, சொத்து வரி ரசீது கதவு எண்.352, எடங்கனசாலை கிராமம், சங்ககிரி தாலுகா என்னும் முகவரியில் 2292 ¾ சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம், அதனுடன் அனைத்து அனுபந்தங்கள், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு திசையில் 12.6 மீட்டர், கிழக்கு மேற்காக தெற்கு திசையில் 17.6 மீட்டர், தெற்கு வடக்காக கிழக்கு திசையில் 13.0 மீட்டர், தெற்கு வடக்காக மேற்கு திசையில் 10.8 மீட்டர் (இதிலிருந்து), கிழக்கு மேற்காக 5.8 மீட்டர் (இதிலிருந்து), வடக்கு திசையில் 2.6 மீட்டர், மொத்தம் 2292¾ சதுர அடி. எல்லைகள்: நத்தம் சர்வே எண்.868/7 கிழக்கு மேற்கு பொது தெருவுக்கு வடக்கு, நத்தம் சர்வே எண்.868/2, சர்வே எண்.868/3 -க்கு தெற்கு, நத்தம் சர்வே எண்.868/2,5,6-க்கு கிழக்கு, நத்தம் சர்வே எண்.868/7-க்கு மேற்கு.

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 29.08.2026 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி	சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம்
தேதி: 28.08.2026 அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை	27.08.2026 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி :
Mr.ராம்பிரசாத் - 70191 19973 / Mr.டீஜோ சாஜன் – 78451 92961

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான M/s.C1 India PVT LTD. மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு Mr.பிரபாகரன் Mob.74182 81709) உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை https://www.bankeauctions.com-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடருந்து பெற்றுக் கொள்ளலாம். M/s. C1 India PVT LTD, Helpline Number's- 7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.
விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com

தேதி: 06.08.2026
ஒப்பம்/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

ஈரோடு மலபார் கோல்டு அண்டு டைமண்ட்ஸ் ஷோரூமில் வைர நகைகள் கண்காட்சி தொடக்க நிகழ்வில் பங்கேற்றோர்.

ஈரோடு மலபார் கோல்டு அண்டு டைமண்ட்ஸ் ஷோரூமில் கலைநயமிக்க வைர நகைகள் கண்காட்சி

■ ஈரோடு

ஈரோடு மலபார் கோல்டு அண்டு டைமண்ட்ஸ் ஷோரூமில் கலைநயமிக்க வைர நகைகள் கண்காட்சி நடைபெற்று வருகிறது.

கலைஞர்களின் நிபுணத்துவம் மற்றும் தனித்துவமான கைவினைத் திறனை வெளிப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த வைர நகைகள் கண்காட்சி, கடந்த 1-ம் தேதி தொடங்கியது. கண்காட்சியை ஜீனத், ஷகீலாபானு, மனோன்மித்தா குடும்பத்தினர் தொடங்கி வைத்தனர். நிகழ்ச்சியில் மலபார் கோல்டு அண்டு டைமண்ட்ஸ் ஈரோடு கிளை தலைவர் ரனீஷ் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

இந்த கண்காட்சி வரும் 9-ம் தேதி வரை நடைபெறுகிறது. இதனைத்தொடர்ந்துவரும் 16-ம் தேதி வரை தங்கம், அன்கட் மற்றும் நவரத்தின நகைகளின் சேதாரத்தில் 30 சதவீதம் வரையிலும், வைர நகைகளில் வைரத்தின் மதிப்பில் 30 சதவீதம் வரையிலும் தள்ளுபடி வழங்கப்படுகிறது.

மேலும், வெள்ளி கொலுசுகள் மற்றும் பொருட்களுக்கு சேதாரத்தில் 25 சதவீதம் பிளாட் தள்ளுபடியும், வெள்ளிப் பொருட்களின் விலையில் 10 சதவீதம் பிளாட் தள்ளுபடியும் வழங்கப்படுகிறது.

கண்காட்சியில் மலபார் கோல்டு அண்டு டைமண்ட்ஸ் நிறுவனத்தின் 'மைன்' வைர நகைகள், பிரம்மாண்ட வடிவமைப்புகளுடன் கூடிய வெட்டாத வைர நகையான 'எரா', விலை உயர்ந்த கற்களால் உருவாக்கப்பட்ட 'பிரீசியா' நகைத் தொகுப்பு, கைவினைக் கலைஞர்களால் உருவாக்கப்பட்ட 'எத்தினிக்', 'டிவைன்', 'ஸ்டார்லெட்' உள்ளிட்ட நகைத் தொகுப்புகள் இடம்பெற்றுள்ளன.

மலபார் கோல்டு அண்டு டைமண்ட்ஸ் நிறுவனம் தனது லாபத்தில் குறிப்பிட்ட சதவீதத்தை சுகாதாரம், கல்வி, வீட்டுவசதி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மகளிர் மேம்பாடு உள்ளிட்ட சமூகப் பொறுப்பு திட்டங்களுக்கு செலவிட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இன்றும், நாளையும் சேலத்தில் மின் நிறுத்தம்

■ சேலம்

சேலம் அம்மாப்பேட்டை செங்குந்தர் மாரியம்மன் கோயில் மற்றும் சேலம் கோட்டை பெரிய மாரியம்மன் கோயில் தேரோட்டத்தை முன்னிட்டு, தேரோட்டம் நடைபெறும் பகுதிகளில் மின் விநியோகம் தற்காலிகமாக நிறுத்தப்படுகிறது, என மின்வாரியம் தெரிவித்துள்ளது.

அம்மாப்பேட்டை செங்குந்தர் மாரியம்மன் கோயில் ஆடிப்பண்டிகை தேரோட்டம் இன்று (6-ம் தேதி) நடைபெறுகிறது. இதையொட்டி அம்மாப்பேட்டை காந்தி மைதானம், திரு.வி.க. பாதை, மாரிமுத்து தெரு, தங்க செங்கோடன் தெரு, அண்ணாமலை கோயில் தெரு, ஆச்சிமுத்து தெரு, எல்லப்பன் தெரு, பண்டரிநாதன் தெரு, அருணகிரி தெரு, புது தெரு, வையாபுரி தெரு உள்ளிட்ட பகுதிகளில் இன்று காலை 7.30 மணி முதல் மாலை 4 மணி வரை மின் விநியோகம் இருக்காது என சேலம் கிழக்கு கோட்ட மின்வாரிய செயற்பொறியாளர் ஜெயா தெரிவித்துள்ளார்.

இதேபோல, சேலம் கோட்டை பெரிய மாரியம்மன் கோயில் தேரோட்டம் நாளை (7-ம் தேதி) நடைபெறுவதையொட்டி, தேரோட்ட பாதையில் உள்ள பகுதிகளில் மின் நிறுத்தம் செய்யப்படுகிறது.

அதன்படி, கோயில் ராஜகோபுரம் பகுதி, முதல் அக்ரஹாரம், தேர் வீதி, ஆனந்தா இறக்கம், லட்சுமி நரசிம்மர் கோயில் வழியாக 2-வது அக்ரஹாரம், வள்ளுவர் சிலை, வரதராஜ பெருமாள் கோயில் (பட்டைக்கோயில்), சின்னக்கடை வீதி, பெரியக்கடை வீதி, கன்னிகா பரமேஸ்வரி கோயில் இறக்கம், நகைக்கடை வீதி, டவுன் போலீஸ் ஸ்டேஷன் ரோடு ஆகிய பகுதிகளில் நாளை காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை மின் விநியோகம் இருக்காது என சேலம் நகர கோட்ட மின்வாரிய செயற்பொறியாளர் சுமதி தெரிவித்துள்ளார்.

பால் உற்பத்தியாளர்கள் கண்டன ஆர்ப்பாட்டம்

■ மேட்டூர்

சங்ககிரி அருகே வேலம்மாவலசு ஆவின் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் முன்பு, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தினர் கறவை மாடுகளுடன் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்திற்கு சங்கத்தின் வட்டச் செயலாளர் சத்யராஜ் தலைமை வகித்தார். மாவட்டத் தலைவர் ராஜேந்திரன் முன்னிலை வகித்தார். மாநில பொதுச் செயலாளர் பெருமாள் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு, பால் உற்பத்தியாளர்களின் கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினார்.

ஆர்ப்பாட்டத்தில், பசும்பாலுக்கு லிட்டருக்கு ரூ.45-ம், எருமைப் பாலுக்கு லிட்டருக்கு ரூ.60-ம் கொள்முதல் விலை வழங்க வேண்டும். மாநில அரசின் ஊக்கத்தொகையை லிட்டருக்கு ரூ.10 ஆக உயர்த்த வேண்டும், கால்நடை தீவனங்களை 50 சதவீதம் மானிய விலையில் வழங்க வேண்டும். ஆவின் தொடக்க கூட்டுறவு சங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வு மற்றும் பணி பாதுகாப்பு வழங்க வேண்டும் உள்ளிட்ட 15 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டன. தொடர்ந்து, தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில் சாலையில் பாலை ஊற்றி போராட்டம் நடத்தினர். இதில் 50-க்கும் மேற்பட்ட பால் உற்பத்தியாளர்கள் மற்றும் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

பழந்தின்னிப்பட்டியில் ஆக.12-ல் மக்கள் தொடர்புத் திட்ட முகாம்

■ நாமக்கல்

ராசிபுரம் வட்டம் பழந்தின்னிப்பட்டி கிராமத்தில் வரும் 12-ம் தேதி மக்கள் தொடர்புத் திட்ட முகாம் நடைபெறுகிறது.

இதுதொடர்பாக நாமக்கல் மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

ராசிபுரம் வட்டம் பழந்தின்னிப்பட்டி கிராமத்தில் வரும் 12-ம் தேதி நடைபெறும் மக்கள் தொடர்புத் திட்ட முகாமுக்கு மாவட்ட ஆட்சியர் லி. மதுபாலன் தலைமை வகிக்கிறார். இதையொட்டி, பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெறும் பணி பழந்தின்னிப்பட்டி கிராம நிர்வாக அலுவலகத்தில் தற்போது நடைபெற்று வருகிறது.

எனவே, பழந்தின்னிப்பட்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் தங்களது கோரிக்கை மனுக்களை கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் அளித்து, வரும் 12-ம் தேதி நடைபெறும் மக்கள் தொடர்புத் திட்ட முகாமில் பங்கேற்று, தங்களது கோரிக்கைகளுக்குத் தீர்வு காணலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரானே (மெட்ராஸ்) லிமிடெட்

பதிவு அலுவலகம்: 'மைத்ரி', 132, கதீட்ரல் சாலை, சென்னை 600 086.
visit us at: www.ranegroup.com CIN No.L65993TN2004PLC052856

Rane

ஜூன் 30, 2026 அன்று முடிவடைந்த காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத தனித்த மற்றும் ஒருங்கிணைந்த நிதி முடிவுகள்.

(ஒரு பங்குக்கான தரவு தவிர ரூ. கோடிகளில்)

வ எண்.	விவரங்கள்	தனித்து நிற்கும்				ஒருங்கிணைக்கப்பட்டது			
		காலாண்டு முடிந்தது			ஆண்டு முடிந்தது	காலாண்டு முடிந்தது			ஆண்டு முடிந்தது
		தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்பட்டது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்பட்டது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்பட்டது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்பட்டது
		30.06.2026	31.03.2026	30.06.2025	31.03.2026	30.06.2026	31.03.2026	30.06.2025	31.03.2026
1.	செயல்பாடுகளின் மொத்த வருமானம்	1,050.64	1,050.32	882.67	3,875.01	1,050.61	1,051.69	884.40	3,878.60
2.	நிகர லாபம் / (இழப்பு) காலத்திற்கான (வரிக்கு முன், விதிவிலக்கான பொருட்கள்)	43.07	48.82	25.98	153.19	41.02	48.55	25.79	149.23
3.	நிகர லாபம் / (இழப்பு) வரிக்கு முந்தைய காலத்திற்கு (விதிவிலக்கான பொருட்களுக்குப் பிறகு)	43.07	48.82	24.97	149.72	41.02	48.55	24.78	145.76
4.	நிகர லாபம் / (இழப்பு) வரிக்குப் பிறகு (விதிவிலக்கான பொருட்களுக்குப் பிறகு)	32.15	37.23	18.72	111.44	30.10	36.96	18.53	107.48
5.	காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் லாபம் / (இழப்பு) காலம் (வரிக்குப் பிறகு) மற்றும் பிற விரிவான வருமானம் (வரிக்குப் பிறகு))	30.04	39.31	18.61	106.67	29.18	39.41	16.85	101.78
6.	ஈக்விட்டி பங்கு மூலதனம்	27.64	27.64	27.64	27.64	27.64	27.64	27.64	27.64
7.	முந்தைய ஆண்டின் தணிக்கை செய்யப்பட்ட இருப்புநிலைக் குறிப்பில் காட்டப்பட்டுள்ளபடி இருப்புக்கள் (மறுமதிப்பீட்டு இருப்பு நீங்கலாக)	-	-	-	745.56	-	-	-	722.92
8.	ஒரு பங்கின் வருவாய் (ஒவ்வொன்றும் ரூ. 10/-) – (காலாண்டுகளுக்கு ஆண்டுக்கு வரவில்லை) 1. அடிப்படை: 2. நீர்த்த:	11.63 11.63	13.47 13.47	6.77 6.77	40.32 40.32	10.89 10.89	13.37 13.37	6.70 6.70	38.89 38.89

1. மேற்கண்ட நிதி முடிவுகள் தணிக்கைக் குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டு, ஆகஸ்ட் 05, 2026 அன்று நடைபெற்ற அந்தந்த கூட்டங்களில் இயக்குநர்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
2. முழு முடிவுகளும் இந்த இணையதளத்தில் கிடைக்கின்றன – https://ranegroup.com/investors/rane-madras-limited-2/?rml-fin-3

QR குறியீடு:

இடம்: சென்னை
தேதி: ஆகஸ்ட் 05, 2026

ரானே (மெட்ராஸ்) லிமிடெடிற்காக
ஹரிஷ் லக்ஷ்மன்
நிறுவனத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்
DIN: 00012602

தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம் (NCLT) சென்னை அமர்வு, சென்னை முன்பாக
IA NO. 1106 OF 2026
IN
CP/IBC/200/CHE/2023
Mr.கிருஷ்ணசாமி வாசுதேவன் ...மனுதாரர்
Vs
Mr.பொன்னுசாமி ரமேஷ் மற்றும் 2 நபர்கள் ...பிரதிவாதிகள்
பெறுநர்:
1.Mr.பொன்னுசாமி ரமேஷ் M/s.தனலட்சுமி பேப்பர் மில்ஸ் பிரைவேட் லிமிடெட்-ன் இடைநீக்கம் செய்யப்பட்ட இயக்குனர், அலுவலக முகவரி: 10Z, டெம்பிள் வியூ, கிருஷ்ணசாமி நாயுடு லேஅவுட், சாய்பாபா மிஷன் அஞ்சல், கோயம்புத்தூர் 641 011
2.Mr.வளவனூர் சுப்ரமணியம் பட்டாபிராம், M/s.தனலட்சுமி பேப்பர் மில்ஸ் பிரைவேட் லிமிடெட்-ன் இடைநீக்கம் செய்யப்பட்ட இயக்குனர், எண்.23, ப்ளாட் 2A ஜெய்பூர் பேலஸ், பத்மாவதியார் சாலை, DAV ஸ்கூல் அருகில், கோபாலபுரம், சென்னை 600 086
3.Mr. நஞ்சன் வேணுகோபால், M/s.தனலட்சுமி பேப்பர் மில்ஸ் பிரைவேட் லிமிடெட்-ன் இடைநீக்கம் செய்யப்பட்ட கூடுதல் இயக்குனர், அலுவலக முகவரி: 10Z, டெம்பிள் வியூ, கிருஷ்ணசாமி நாயுடு லேஅவுட், சாய்பாபா மிஷன் அஞ்சல், கோயம்புத்தூர் 641 011
மேற்கூறிய வழக்கு 28.07.2026 அன்று மாண்புமிகு NCLT, சென்னை அமர்வு II-இன் முன் விசாரணைக்கு வந்தது. விசாரணையின் போது, மாண்புமிகு தீர்ப்பாயம் மாற்று சேவை முறையில் அறிவிப்பிலை செய்தித்தாளில் வெளியிட உத்தரவிட்டது. எனவே 03.09.2026 அன்று மாண்புமிகு தீர்ப்பாயத்தின் முன் நீங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். தவறினால், இவ் வழக்கு நீங்கள் இல்லாமலோ விசாரிக்கப்பட்டு முடிவு செய்யப்படும்.
K.மூர்த்தி
மனுதாரரின் வழக்கறிஞர்

வரி விளம்பரங்கள்
பொது
பொது அறிவிப்பு

BEFORE THE MOTOR ACCIDENT CLAIMS TRIBUNAL AT BANGALORE
M.V.C. NO. 7598/2024 (SCCH-09)
Petitioner: Sri Ramanna@ Ramaiah -V/s-
Respondents: Smt. Srividhya S @ Srividhya Selvakumar & anr.
SUMMONS TO THE FIRST RESPONDENT
Smt. Srividhya S @ Srividhya Selvakumar, W/o. Selvakumar, No.29C/4, Morappur Main Road, Karimangalam Taluk, Dharmapuri -635 111, Tamil Nadu, Owner of Ashok Leyland lorry bearing, Regn. No.TN-29-BK-4080.
Whereas the Petitioner has filed the above claim petition before this Hon'ble Court under Section 166 of the Motor Vehicle Act, 1989 against the Respondents claiming compensation of Rs.10, 00,000/- on account of injuries sustained by him in the motor vehicles accident occurred on 17/04/2023 at about 04.45 p.m. which took place in Near Sompura Bridge, NICE Road, via Sompura to Kanakapura Road, Bengaluru, involving vehicle Lorry bearing Regn. No.TN-29-BK-4080.
Whereas you are hereby summoned to appear in this court in person or by a pleader duly instructed and also able to answer all material questions relating to the above petition on the 15/09/2026 at 11.00 AM. on the fore-noon to answer the claim.
Take notice that in default of your appearance on the day before mentioned, the above petition will be heard and determined ex-parte in your absence.
Given under my hand and the seal of the court on this 25/07/2026
By order of the Court, Assistant Registrar, Court of Small Causes, Bengaluru
Advocate for Petitioner: M. Laxmanna
No: - 564, 4th Block, 6th Main, Rajajinagar, Bengaluru- 560 010.

ஆக்சிஸ் பேங்க் லிமிடெட்
சட்ட மற்றும் ஆதரவுக் குழு
2வது தளம், கதவு எண்.31, பழைய எண்.14
தெற்கு மாடத் தெரு, மயிலாப்பூர், சென்னை – 600 004

அசையாச் சொத்து மின்-ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) மற்றும் 9(1)–ன் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களின் மின்–ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்கும், குறிப்பாக கீழ்க்கண்ட கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களுக்கும் அறிவிப்பதாவது, ஈடுபெற்று கடன் வழங்கியுள்ள வங்கிக்குச் சேரவேண்டிய கடன் பாக்கி மற்றும் அதற்கான வட்டி, கட்டணங்கள், இதர செலவினங்கள் முதலியவற்றைச் சேர்த்து வசூலிப்பதற்காக கடன் வழங்கிய வங்கியிடம் அடமானம் / ஒப்படைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்தினை ஈடுபெற்று கடன் வழங்கிய வங்கியின் அதிகாரபூர்வ அலுவலர் நேரடியான சுவாதீனத்தில் எடுத்துக் கொண்டுள்ளார். அந்தச் சொத்துக்கள் 25.08.2026 தேதியன்று 'உள்ள இடத்தில் உள்ளவாறு' மற்றும் 'உள்ளது உள்ளவாறு' மற்றும் 'எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே' மற்றும் 'பொறுப்பேற்காத நிலையில்' எனும் அடிப்படையில் விற்கப்படும்.

வ. எண்.	கடன்தாரர் மற்றும் உத்தரவாதமளித்தவர் பெயர் மற்றும் முகவரி	சொத்து விபரம்	குறைந்தபட்ச கேட்பு விலை / முன்வைப்புத் தொகை	ஏலத் தேதி மற்றும் நேரம்	கடன் நிலுவைத் தொகை (ரூ)	தொடர்பு கொள்ள வேண்டியவர்
1.	(கடன் எண்.2014) திரு. சங்கர் ராஜசேகரன், த/பெ.திரு. ராஜசேகரன், ஃப்ளாட் எண்.101, சவேரியா பெப்பிள், 2B மெயின் ரோடு, லக்ஷ்மம்மா லேஅவுட், பனஸ்வாடி, பெங்களூரு, கர்நாடகா – 560043. மேலும் : கதவு எண். 1/136 (6), கோல்டன் ராயல் சிட்டி, திரஜ்லால் காந்தி கல்லூரி எதிரில், நரிப்பள்ளம், சிக்கனாம்பட்டி, சேலம் – 636 309. சொத்து முகவரி : பழைய சர்வே எண்.34/1D, 25/2A, புதிய சர்வே எண்.34/12, 25/2B8, P எண்.111, கதவு எண்.1/136, 2/136, 3/136, 4/136, 5/136, 6/136, கோல்டன் ராயல்சிட்டி, சிக்கம்பட்டி, சேலம்–636 309.	திரு. சங்கர் ராஜசேகரன் பெயரிலுள்ள சொத்து. சொத்து–1 (விற்பனைப் பத்திர ஆவண எண்.342/2012ன்படி) : சேலம் மாவட்டம், சேலம் மேற்குப் பதிவு மாவட்டம், ஓமலூர் சார் பதிவு அலுவலகம், ஓமலூர் தாலூகா, சிக்கனாம்பட்டி கிராமம், மறு சர்வே எண்.25/2, உட்பிரிவின்படி பட்டா எண்.746, மறு சர்வே எண்.25/2B, இதிலமைந்த 1.72.5 புஞ்சை ஹெக்டேரில், 4.26 மற்றும் பிற சொத்துக்களுடன் பிளாட்டுகள் பிரிக்கப்பட்டதில், அதிலமைந்த நடப்பு உட்பிரிவின்படி சர்வே எண்.25/2B8 ல் உள்ள பிளாட் எண்.111 வடபுற பகுதி, அதில் 547½ சதுரடி நிலம், அனைத்துப் பிற வ